# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 68 — 1973 ජූලි 13 වැනි සිකුරාදා — 1973.07.13

68 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II அ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்பொருட்டு தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 667 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 682 |


## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நீதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சகர்.

அரசாங்க அச்சகத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

---

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

**6. யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 03 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

**7. பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய திகதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்கள் அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்றும் பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(ii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையன கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## பெருந்தோட்டத் தொழில் அமைச்சு

### பிரசாரப்படுத்தல் உத்தியோகத்தர் பதவி

பெருந்தோட்டத் தொழில் அமைச்சில் பிரசாரப்படுத்தல் உத்தியோக பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் செயலாளர், தோட்டத் தொழில் அமைச்சு, த.பெ. இல. 1652 கொழும்பு 1, என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு :—(i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

**2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :—**

(i) பதவி நிரந்தரமானதும் சேமலாப நிதிக்கு உரித்துடையதுமாகும். தெரிவு செய்யப்படுபவர் தனது முழுத் திரட்டு சம்பளத்தின் 6% தை அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவு தொகையாக செலுத்தப்பட வேண்டும். அரசாங்க உதவுதொகை முழுத் திரட்டு சம்பளத்தின் 9% ஆகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் 1972 ந் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் அவரது முன்னைய உரிமைகள் பாதுகாக்கப்படும்.

**3. சம்பளமும் ஏனைய படிகளும் :**—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு.—

திரட்டிய சம்பளம்—வருடத்திற்கு ரூபா 4,152—7×144—4×180 உயர்வுகளைச் கொண்ட ரூபா 7,320 (ரூபா 5,304 க்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.)

குறிப்பு :—விசேச அனுபவமுள்ள விண்ணப்பதாரரொருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவரது அனுபவத்திற்கும் திறனுக்கு மேற்ப, தாபன பணிப்பாளரது அங்கீகாரத்துடன் தகுதியான சம்பள நிலையில் அமர்த்தப்படுவர். ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து அவரது சம்பளம் தாபனக் கைநூலின் VII ம் அத்தியாயம் 9 ம் பிரிவின் பிரகாரம் நிர்ணயிக்கப்படும்.

4. தேவைப்படும் தகைமைகள் :—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(i) (அ) பொதுக் கல்வித் தராதரப் பத்திரம் (உயர்தரம்) அல்லது அதற்குச் சமமான தராதரப்பத்திரம்,

(ஆ) பத்திரிகை எழுதுதுறை சம்பந்தமாகவுள்ள அனுபவம் மேலதிக தகமையாகக் கணிக்கப்படும்,

அல்லது

(ii) (அ) சிரேட்ட தராதரப் பத்திரத்தை அல்லது அதற்குச் சமமான தராதரப்பத்திரத்தை உடையவராயும்

அத்துடன்

(ஆ) பத்திரிகை எழுத்துத்துறையில் 5 வருட அனுபவம் உடையவராயும் இருத்தல் வேண்டும்,

(iii) ஆங்கிலம் சிங்களம் அல்லது தமிழில் பிரச்சாரப்படுத்துவதற்காக கட்டுரைகள் தயாரிப்பதிலும், எழுதுவதிலும், விமர்ச்சிப்பதிலும் தகுதியுடையவராயிருத்தல்,

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியில் 25 வயதுக்குக் குறையாதவராயும், 40 வய்துக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா.)

(v) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும் பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் ;

(அ) பிறப்புச்சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ஆ) உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள்.

(ஈ) பத்திரிகை எழுத்துத் தொழில் தகைமைக்கான சான்றிதழ்.

குறிப்பு :—(i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது அரசாங்க யாக்கங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளோ தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படவேண்டுமேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I பகுதி (IIஅ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸ,
செயலாளர்.
பெருந்தோட்டத் தொழில் அமைச்சு.

பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் அலுவலகம்,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு-1.
1973 ம் ௵ யூலை மீ 3 ந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

பிரச்சாரப்படுத்தல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்
பெருந்தோட்டத் தொழில் அமைச்சு

(இவ்விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப்படுதல் கூடாது.)

1. முழுப் பெயர் (உறுப்பெழுத்தில்) :———.

2. அஞ்சல் முகவரி :———.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. (அ) பிறந்த திகதி :———.
வருடம்———. மாதம்———. தேதி———.

(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது :—
வருடங்கள்———. மாதங்கள்———. நாட்கள்———

4. வம்சாவழி காரணமாகவோ, அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக.—

(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விவரங்களைத் தருக.)

5. பிறந்த இடம் : (அ) விண்ணப்பதாரர் :———.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :———
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பாட்டன் :———.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :———.

6. திருமணமானவரா, தனியாளா விதவையா அல்லது தாரமிழந்தவரா எனக் குறிப்பிடுக :———.

7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :
(i) சிங்களம் :———.
(ii) தமிழ் :———.
(iii) ஆங்கிலம் :———.

8. 12 வயதிலிருந்து நீர் கல்விபெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :

பொதுக் கல்வி

| பாடசாலை கல்லூரி | அல்லது | தொடக்கம் வரை |
| --- | --- | --- |
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

உத்தியோகக் கல்வி

| கல்வித் தாபனம் | தொடக்கம் வரை |
| --- | --- |
| (1) | |
| (2) | |
| (3) | |

9. நீர் கடன் தொல்லைகள் அற்றவரா? இல்லையெனின், கடன் பொறுப்புகளின் தொகை என்ன? :———.

10. சட்டநீதிமன்றத்தில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா? அப்படியானல் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு, தேதிகளோடு முழுவிபரங்களையும் தருக :———.

11. பாடசாலைக்கல்வி, உத்தியோகக்கல்வி, நுண்தொழிற்கல்வித் தகைமைகள் : (பல்கலைக் கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் விசேட வகுப்புப் பட்டங்களாயின் அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பனவற்றைக் தேதிகளுடன் தருக) :———.

12. பத்திரிகை எழுத்துத்துறையிலும் பிரச்சாரப்படுத்தல் துறையிலுமுள்ள அனுபவம் :———.

13. தற்போதைய தொழிலும், முன்னர் பதவிகளில் இருந்தால், அவற்றின் விபரங்களும் :

| பதவி | தொடக்கம்/வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
| --- | --- | --- |
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 14 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.)

14. மேலும் வேறு விபரங்கள் :———.

15. உம்மைப்பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :———.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தேதி :———.

7-417—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

மண்வளப் படம் வரைபவர் பதவி

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மண்வளப்படம் வரைபவர் பதவிக்கு இத்தால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை "நீர்ப்பாசனப் பணிப்பாளர், அ. பெ. 1138, கொழும்பு" அவர்களை 1973.07.31 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்தடையுமாறு அனுப்பப்படுதல் வேண்டும்.

2. சம்பள அளவுத் திட்டம் :
இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள விகிதம் ஆண்டொன்றுக்கு ரூ. 3,432—144 × 21—6,456 ஆகும். திறமைகாண் தடை ரூ. 5,304 க்கு முன்னர் ஆகும்.

3. நியமன நியதிகள் :
இப்பதவி நிரந்தரமானதும் அ. சே. ஏ. நி. அடிப்படையில் அமைந்ததுமாகும். நியமனம் பெறுபவர் தனது திரட்டிய வேதனத்தில் 6 வீதத்தை அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்திற்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தின் உதவுதொகை திரட்டிய வேதனத்தின் 9 வீதமாகும்.

4. வேண்டப்படும் தகைமைகள் :
ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளைப் பெற்றுள்ளனர் என்பதற்கு தகுந்த சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) இலங்கைப் பிரசையாக விருத்தல் வேண்டும். ("இலங்கைப் பிரசை" என்னும் பதம் வம்சாவழி அல்லது பதிவு மூலமான இலங்கைப் பிரசையைக் குறிக்கும்)

(ஆ) 1973.07.31 அன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (இவ் வயதெல்லை ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் அபேட்சகர்கள் குறிக்கப்பட்ட பிற தகைமைகள் யாவற்றையும் பெற்றிருப்பின் செல்லுபடியாகாது.)

(இ) சிறந்த நற்குணமுடையவராயும் திடகாத்திரமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) கீழே தரப்பட்டுள்ள கல்வித் தகைமைகளேயும் வேண்டிய அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும் :—

(அ) 1. கணிதம், பௌதிகம் ஆகியபாடங்களுடன் சி. பா. த. பத்திரமும் அல்லது கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களுடன் அதற்குச் சமமான பத்திரமும்

அல்லது

2. சிங்களம்/தமிழ், கணிதம், பௌதிகம் ஆகிய மூன்று பாடங்கள் உட்பட ஆறு பாடங்களிற் பொதுக் கல்வித் தராதர (சாதாரணம்) ப் பரீட்சையில் அடுத்தடுத்துச் தோற்றிய இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : (அ) 1. சி. பா. த. ப./பொ. க. த. ப. (சாதாரணம்) அல்லது இதனையொத்த பரீட்சையொன்றில் வரைதலில் சித்தி பெற்றிருந்தால் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

2. இத்திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர் எவராவது கீழேயுள்ள உபபந்தி (ஆ) இல் விதிக்கப்பட்டிருக்கும் வேண்டிய பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றிருந்து அத்துடன் சி. பா. த. ப./பொ. க. த. ப. (சாதாரணம்) அல்லது இதனையொத்த பரீட்சையொன்றில் கணிதம்/எண்கணிதம், சிங்களம்/தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருந்தால் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

(ஆ) 1. மண் அளவைக் கைநூல் இல. 18 இன் நடைமுறைக்கமைய மண்வளப்பட வரைவியலில் குறைந்தது ஆறுமாத கால முற்பயிற்சியும் நில அளவை, நில உபயோகப்படங்களை நிரற்படுத்தலிலும் தொகுத்தலிலும் குறைந்தது மூன்று வருடகால அனுபவமும்,

2. மேலேயுள்ள பந்தி (ஈ) 2 விதிக்கப்பட்டிருக்கும் பயிற்சிநெறியையும் அனுபவத்தையும் கொண்டவர்களாக விண்ணப்பதாரிகள் காணப்படாதவிடத்து குறித்த கல்வித் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து தகுதி வாய்ந்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்குத் திணைக்களத்தினுல் மூன்று வருடப்பயிற்சி நெறியளிக்கப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவர்களின் முதலாவது, இரண்டாவது, மூன்றுவது வருடகாலப் பயிற்சி நெறியின் போது சகலதும் உள்ளடக்கிய படியாக ரூபா 250/-, ரூபா 257/50, ரூபா 265/- முறையே வழங்கப்படும்.

பயிற்சியாளர்களுக்கு இலவச குடிமனைகள் வழங்கப்பட்டால் 69.09.15 ஆந் திகதிய 770 இலக்கத் திறைசேரியின் சுற்றுநிருபத்தின் பந்தி 4(X) (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வீதத்தின்படி அவர்களிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்படும்.

5. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவர்களினூடாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும். இவை திருப்பியனுப்பப்பட மாட்டா.

(அ) பெறப்பட்ட கல்வித் தகைமைப் பற்றிய சான்றிதழ்கள்.

(ஆ) மண்வளப் படவரையியலில் முன்னர் பெற்ற பயிற்சிநெறி பற்றிய சான்றிதழ்.

(இ) மண் அளவை, நில உபயோகப் படங்களை நிரற்படுத்தலிலும் தொகுப்பதிலும் பெற்ற அனுபவம் பற்றிய சான்றிதழ்.

(ஈ) சமீபத்தைய மூன்று குணச் சான்றிதழ்கள் (இவற்றிலொன்று கடைசியில் கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெறப்பட்டதாயிருத்தல் வேண்டும்).

(உ) பிறப்பு பதிவுச் சான்றிதழ் :

மு. கு. : ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கு அமயக் கொடுக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. பிறப்புப் பதிவு செய்யப்படாத விண்ணப்பதாரி யொருவரின் விடயத்தில் அவரது வயதினை நிலைநாட்டுவதற்கு பதிவாளர் அதிபதியால் வழங்கப்பட்ட விசேட சான்றிதழ் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. இலங்கை வர்த்தமானியின் பகுதி 1 பிரிவு (2 அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவையினுள்ள பதவி நியமனங்களுக்கு ஏற்புடையனவாகிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகிறது.

பி. எச். பெரேரா,
நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர்.

நீர்ப்பாசனத் திணைக்களம்,
அ. பெ. 1138, கொழும்பு 7.
1973.06.22.

## மாதிரி விண்ணப்பப்படிவம்

மு. கு. : விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் நீர்ப்பாசனப் பணிப்பாளருக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். கடிதவுறையின் இடதுபக்க மூலையில் " மண்வளப் படம் வரைபவர் பதவிக்கான விண்ணப்பம் " எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

மண்வளப் படம் வரைபவர் பதவி நீர்ப்பாசனத் திணைக்களம்

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. (அ) விண்ணப்பதாரியின் பிறந்த திகதியும் இடமும் : ——— (பிறப்புச் சாட்சிப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

(ஆ) பிறந்த திகதியும் இடமும் :—.
(1) விண்ணப்பதாரியின் தந்தை :————.
(2) தந்தைவழிப் பாட்டன் :————.
(3) தந்தைவழிப் பூட்டன் :————.

4. தேசிய இனம் :————.
5. திருமணமானவரா ? தனியானவரா ? தாரமிழந்தவரா ? :——
6. சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகைமைகள் :———. (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
7. மண்வளப்பட வரைவியலில் முன்னர் பெற்ற பயிற்சி பற்றிய விபரங்கள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
8. மண்அளவை நில உபயோகப் படங்களை நிரற்படுத்தல், தொகுத்தலில் பெற்ற அனுபவம் பற்றிய விபரங்கள் : ————.
(சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)
9. தற்பொழுது ஏதும் பதவி வகிப்பின் (நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா எனக் குறிப்பிடுக) :————.
10. பாடசாலையை விட்டு விலகிய பின்னர் வகித்த உத்தியோகமும் (அல்லது) பெற்ற பயிற்சியும் பற்றிய விபரங்கள் :————.
11. விண்ணப்பதாரி அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் பதவியேதுவும் வகித்திருந்தால் விலகியதற்காகிய காரணம் :————.
12. நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுத் தண்டனை பெற்றிருந்தால் குற்றமும் தண்டனையும் பற்றிய விபரங்கள் :————.
13. சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் :—.
1. ————.
2. ————.
3. ————.

இவ்விண்ணப்பத்தில் யான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது தவறுனவையெனக் காணப்படுங்கால், அப்பிழையானது யான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகுதியற்றவனுக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடெதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுதற்கும் ஆளாவேனென்பதையும் யான் அறிவேன்.

இடம் :————.
திகதி :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

7—420—13.7.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

**கடற்றொழில் திணைக்களம்**

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி (மீன்பிடி வள்ள தொழில்நுட்பம்)

கடற்றொழில் திணைக்களத்தில் 1 ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மீன்பிடி வள்ள தொழில்நுட்பம்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு பின்வரும் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், செயலாளர், கடற்றொழில் அமைச்சு, காலிமுகம், த. பெ. இல. 1707, கொழும்பு 3, என்ற விலாசத்தை வந்தடைய வேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள்—73.8.17

(ஆ) கடல்கடந்த விண்ணப்பங்கள்—73.8.17

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறுமிடத்து அல்லது தாமத மாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப் படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் வரும் இடருக் கும் தாமே பொறுப்பாவர்.

(2) கடல்கடந்த அபேட்சகர்கள் அவர்கள் விரும்பினால், அந் நாட்டிலுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் அலுவலகங்களில், இலங்கைக் கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு குறிப்பிட்ட தேதிக்குமுன் விண்ணப்பப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க லாம்.

(3) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கைக் குடியரசின் கீழ் நியமனம் பெற வெளிநாட்டில் தேர்ந் தெடுக்கப்படும் இலங்கையரான உத்தியோகத்தர், சேவைக்கு உடற்றகுதி உடையவரென்பதை உறுதிப்படுத் தற் பொருட்டு, தம்மை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தொழில் செய்வோரால் சோதிக்கப்படுவதற்கு உடன்படு மாறு வேண்டப்படுவர். இத்தகைய சோதனைக்கான கட் டணமும், இலங்கைக்கு வருவதற்கு ஏற்படும் பிரயாணச் செலவும் உத்தியோகத்தராலேயே செலுத்தப்பட வேண் டும்.

2. **ஒப்பந்த நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—(1) பதவி நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நிய மனம் 3 ஆண்டுகாலத்துக்குத் தகுதிகாண் முறையில் இருக்கும் தெரிவு செய்யப்படும் அபேட்சகர் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்த வேண்டும். எனினும், நிரந்தர மானதும், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவதுமான பதவியிலுள்ள ஒரு உத்தியோகத்தர் தெரியப்படுமிடத்து, இப்புதிய பதவியிலும் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பளத்தைப் பெறும் வாய்ப்புடையவ ராவர். நியமனம் முதற்கண் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருக்கும். பதவிக்குத் தகை மையற்றவரென அவர் காணப்படின் இப்பருவத்தின் எக்காலத்தி லும் இவரின் முந்திய பதவிக்கு மாற்றப்படலாம்.

(2) கீழேயுள்ள 3 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை யைப் பெறும் பொருட்டு இவ்வுத்தியோகத்தர் வேலைக்கு அமர்த்தப் பட்டதும் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுபவர்.

(3) உத்தியோகத்தர் வெளிநாட்டில் பயிற்சிக்காகத் தெரியப்படு மிடத்து, இலங்கைக் குடியரசுடன் ஓர் உடன்படிக்கை செய்ய வேண்டி ஏற்படும்—

(அ) ஏனையவற்றுடன், தனது பயிற்சியைப் பிரமாணிக் குடனும், ஊக்கத்துடனும், கடைப்பிடித்து திருப் தியான முறையில் பூரணப்படுத்துவதாகவும், வேண்டப்படின், (பயிற்சி முடிவுற்றபின் இலங் கைக் குடியரசால் தீர்மானிக்கப்படும்) ஒரு குறிப் பிட்ட காலத்துக்கு இலங்கைக் குடியரசுக்குத் சேவை செய்வதாகவும் பொறுப்பேற்பதோடு,

(ஆ) உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகட்கும், விதிகட் கும் இயைய நடக்கத்தவறின், பயிற்சி நெறியின் முழுச்செலவையும், அதாவது இலங்கைக் குடியர சாலோ அல்லது வேறு எந்த முகவராண்மையாலோ அல்லது அவ்வப்பகுதியின் கூட்டினாலுமோ இப்ப யிற்சிநெறி முழுவதும் சம்பந்தமாகப் பொறுப்பேற் கப்பட்ட செலவை (ஆவது, சம்பளம், படி, பிரயா ணச் செலவுகள், கட்டணங்கள் முதலியன), இலங் கைக் குடியரசுக்குத் திருப்பிக் கட்டவும் பொறுப் பேற்பதாக, இலங்கைக் குடியரசுடன் ஒரு உடன் படிக்கையில் ஈடுபட வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்கான வழங்கப்படும் சம்ப ளத்திட்டம் வருமாறு: ரூபா 7,440 இலிருந்து ரூபா 16,320 வரை செல்லும். ரூபா 360 வீதம் 10 ஆண்டுகளும், ரூபா 480 வீதம் 11 ஆண்டுகளும் சம்பள உயர்ச்சி வழங்கப்படுகையில், ரூபா 12,000 க்கும் ரூபா 14,880 க்கும் முன் வினைத்திறன்காண் தடை யில் நிறுவப்படும். தெரியப்பட்ட அபேட்சகர் நியூபவுண்ட்லன்ட், சென்ற் ஜோன்ஸிலுள்ள மீன்பிடி, கப்பற் போக்குவரத்து, கடலக எந்திரவியல் இலத்திரனியல் கல்லூரியினால் அளிக்கப்படும் கப்பல் கட்டும் தொழில் நுட்பத் துறையில் 'டிப்ளோமா' தகைமையையோ அல்லது கடற்றொழில் அமைச்சின் காரியதரிசியினால் அங்கீகரிக் கப்பட்டதும் அதற்குச் சமமான தகைமைகளைப் பெற்றாலொழிய ரூபா 11,520 க்கு மேல் வருடாந்தச் சம்பளமாகப் பெறத் தகுதி யுடையவராகார்.

குறிப்பு.—(1) புதிதாகச் சேர்க்கப்படுகையில் ஒரு உத்தியோகத் தர் அடிப்படை விஞ்ஞானப் பட்டத்திலும் தாமுயர்ந்த பி. எச்டி. பட்டமோ அல்லது எம். எஸ்சி. பட்டமோ உடையவராயிருப்பின், ஆரம்ப வருடாந்தச் சம்பளம் ரூபா 8,520 ஆகவிருக்கும்.

(2) தெரியப்பட்ட அபேட்சகரின் தகைமையும், அனுபவமும், சம்பளச் சலுகைக்குப் பாத்திரமாயிருப்பின், தாபனப் பணிப்பாளரின் உசாவுதலுடன் அவர் அத்தகைய சம்ப ளத்தில் அமர்த்தப்படலாம்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வருவனவற் றைத் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவவேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உள்ளவராயிருத் தல் வேண்டும்.

(ஆ) 73-8-17 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்குக் கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

(இ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் கணிதவிய லைத் துணையாகக் கொண்டு பௌதிகவியலைச் சிறப்பாகப் பயின்ற முதலாந்தர அல்லது இரண்டாந்தர மாண்புப் பட்டதாரியாகவிருக்க வேண்டும்.

5. கேட்கப்படும்பொழுது தனித்த அல்லது பின்வரும் எல்லாப் பத்திரங்களையும் சமர்ப்பிக்குமாறு அபேட்சகர் வேண்டப்படுவர்:—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழோ உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவைக்கோ வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) உயர்ந்த கல்வி அல்லது பட்டச் சான்றிதழ்.

(இ) படிப்பு அதிபரிடமிருந்தோ, கல்லூரி விரிவுடையாளரிட மிருந்தோ பேராசிரியரிடமிருந்தோ பெற்ற ஒன்று உள் ளடங்கிய இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்.

(ஈ) உயர் தொழிற்றகைமைச் சான்றிதழ் அல்லது தொழில்நுட் பத் தகைமைச் சான்றிதழ் அல்லது இரண்டும்,

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்து பெற்ற உயர்ந்த தேர்வுச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பப் படிவத்துடன் எச்சாதனமோ, சாத னங்களின் பிரதியோ இணைக்கப்படலாகாது.

(2) கேட்கப்படும்பொழுது சாதனங்களை வழங்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட் டாது.

6. இலங்கைக் குடியரசுச் சேவையிலுள்ள உத்தியோகத்தரின் விண்ணப்பங்கள் அவ்வத்திணைக்களத்தின் தலைவரினூடாக அனுப் பப்படல் வேண்டும். எனினும், அவர்கள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை, கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு முடிவுறுத் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரைச் சென்றடையு மாறு நேராக அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பங்களும், இது சார்ந்த தொடர்புகளும், கடற் றொழில் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண்டுமே யன்றி இவ்வமைச்சைச் சேர்ந்த எவ்வுத்தியோகத்தருக்கும் தனிப் பட்ட முறையில் அனுப்பப்படலாகா.

8. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) இன் தொடக் கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கைக் குடியரசுச் சேவைப் பதவி நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளின் கவனத்தைக் கோருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

9. விண்ணப்பங்கள் முடிவுறும் திகதியிலிருந்து 3 வாரங்களுக் குள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமைபற்றி அபேட்சக

ருக்கு அறிவிக்கப்படும். ஒப்புதற் கடிதம் பெறுவிடின், கொழும்பு 3, காலிமுகத்திலுள்ள கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும்.

செயலாளர்,
கடற்றொழில் அமைச்சு.

கடற்றொழில் அமைச்சு,
த. பெ. இல. 1707,
காலிமுகம்,
கொழும்பு 3, 1973.07..4

கடற்றொழில் திணைக்களம்

ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி (மீன்பிடி வள்ள தொழில்நுட்பம்)

(குறிப்பு.—விண்ணப்பம் அனுப்பப்படும் அஞ்சலுறையில் இடப் பக்கத்து மேல் மூலையில் "ஆராய்ச்சி உத்தியோகத்தர் (மீன்பிடி வள்ள தொழில்நுட்பம்) பதவிக்கான விண்ணப்பம்" என எழுதிப் பதிவு அஞ்சலில் செயலாளர், கடற்றொழில் அமைச்சு, த. பெ. இல. 1707, காலிமுகம், கொழும்பு 3 என்ற முகவரிக்கு அதை அனுப்ப வேண்டும்).

1. முழுப்பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
1973.8.17 இல் வயது : ஆண்டு———— மாதம்—— ——நாள்————.

4. நாட்டினம் :————.

5. விவாகமானவரா, தனியாளரா ? :————.

6. கல்வித் தகைமைகள் :————.

7. தொழிற்றுறைத் தகைமைகள் :————.

8. பாடசாலையை விட்டதிலிருந்து இதுவரை பார்த்த தொழிலும்/அல்லது பயிற்சியும் :————.
(தொழிலிலமர்ந்த திகதியும் விட்ட திகதியும், விடுவதற்கான காரணங்களும் குறிப்பிடவேண்டும்).

9. தற்போதைய வேலை :————.

10. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும் பதவிகளும் : ————

11. வேறு ஏதாவது தகைமைகள் :————.

விண்ணப்பத்தில் தந்த விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கே தந்துள்ள விபரங்களுள் எவையாவது பொய்யானவையோ சரியற்றவையோவெனக் காணப்பட்டால் தெரிவுக்கு முன்னர் யான் தகைமை நீக்கத்துக்கு ஆட்படலாமென்றும் நியமனம் பெற்றபின் விபரச் சரியின்மை கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கு ஆட்படலாமென்று அறிந்துள்ளேன்.

————,
கையொப்பம்.

திகதி :————.

7—412—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

கோப்பாய் நீர்வேலி ஆகிய கிராமச் சபைப் பிரதேசங்களுக்கு சடுதிமரண விசாரணையாளர் பதவி

கோப்பாய், நீர்வேலி ஆகிய கிராமச் சபைப் பிரதேசங்களுக்கு சடுதி மரண விசாரணையாளர் ஒருவரை நியமிக்கவிருப்பதனால் அக்கிராமச் சபைப் பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவரிடமிருந்து மாத்திரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களினதும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினதும் 30.7.73 திகதியன்று 30 வயதுக்குக் குறைந்தவர்களிடமிருந்தும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. சகல விண்ணப்பதாரர்களும் கீழ்க்காணும் விபரங்களையும், சான்றுப் பத்திரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும் :—

1. முழுப் பெயரும் விலாசமும் :————.

2. வசிக்கும் இடம் :————.

3. வயதும் பிறந்த திகதியும் :————.

4. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? ————.

5. கல்வித் தகைமைகள் :—
தமிழ் :————.
ஆங்கிலம் :————.

6. தற்போது வகிக்கும் பதவி அல்லது முன்பு வகித்த பதவிகள் : ————.

7. சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் (பிரதிகள்) :—

எம். ரி. டபிள்யூ. அமரசேகரா,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி, யாழ்ப்பாணம்.
1973.6.26.

7—271—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

வவுனியா மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பகுதிக்கு சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ம் வருடம் ஆடி 28 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ எமது விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

2. நிரந்தமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின் போது இடம்பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10 தரப்படும்.

3. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—

(அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது 30 வயதிற்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்,

(இ) புதுக்குடியிருப்புப் பகுதியின் நிரந்தரப் பிரஜையாகவும்,

(ஈ) (1) 1925 ம் ஆண்டிற்கும் 1944 ம் ஆண்டுக்குமிடையே தமிழ்ப் பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது தமிழ்ப் பாடத்துடன் ஆங்கிலப் பாடசாலை விடுகைப் பரீட்சையில் அல்லது தமிழ் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும்,

(2) தமிழ்ப் பாடத்துடன் சிரேஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆகக் கூடிய பரீட்சைத் தாரதரப் பத்திரம்.

(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள்.

5. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

எல். பி. விக்கிரமாராச்சி,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

கச்சேரி,
வவுனியா,
1973.06.18.

மாதிரி விண்ணப்பப் பத்திரம்

வவுனியா மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் சடுதி மரண விசாரணை அதிகாரிக்கான பதவி வெற்றிடம்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.
2. விலாசம் :————.
3. நிரந்தர வசிப்பிடமும் வதியும் கால எல்லையும் :————.
4. (அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது சரியான வயது : ————.

(ஆ) பிறந்த திகதியும் இடமும் :————.
5. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா :————.
6. கல்வித் தகைமைகள் :————.
7. தற்போதைய தொழில் :————.
8. முன்பு வேறு தொழில்கள் புரிந்திருப்பின் அவற்றின் விபரம் : ————.
9. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :————.
10. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் : ————.
11. விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :————.
12. இப்பதவிக்குத் தேவையான வேறு தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :————.

என்னால் மேற்குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை யென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

7–259—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர்ப் பிரிவுக்கு பிறப்பு, இறப்புப் பதிவாளர் பதவி

மேற்கூறப்பட்ட பதவிக்கு நிந்தவூர் பிறப்பு, இறப்புப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலமாக வசிப்பவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண்/பெண் இருபாலாரும், விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், இப்பிரிவை உள்ளடக்கும் காரியாதிகாரியின் அலுவலகத்திலும், கிராமசேவையாளர் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிசு நிலையம், சனசமூக நிலையங்களிலும் ஏனைய பகிரங்க நிலையங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிற அறிவித்தல்களில் அடங்கி உள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்பப்படுவதோடு 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

சோமசிறி முனசிங்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளருக்காக.

மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
அம்பாறை,
25.6.73.

7–258—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

பதிவாளர் சேவை தரம் I இன் பதிவாளர் பதவிகள்

பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பதிவாளர் சேவை தரம் I இன் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திரட்டிய சம்பள அளவு : ரூபா 6,720—12 × 360—7 × 480—ரூ. 14,400 (வருடாந்தம்)

2. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பம், கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப்படிவத்தில் எழுதப்பட்டு, விண்ணப்பகாரர் வேலை செய்யும் திணைக்களத் தலைவர் மூலமாக 1973.08.14 ஆம் திகதிக்கோ அல்லது முன்பாகவோ இவ்வலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும்.

3. **தகவுத்திறன்.**—நிறுவுதிறனும், நிர்வாக ஆற்றலுக்குமான சான்றுகளைக் காட்டியுள்ள பின்வரும் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுள்ளவர்களாவர் :—

(அ) நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட பதிவாளர் சேவை தரம் II.

(ஆ) பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்பு.

(இ) பொது எழுதுநர் சேவையில் வகுப்பு 1. ஆகக் குறைந்தது இவ் வகுப்பில் 6 வருட சேவையாகுதல் வேண்டும்.

காணிப்பதிவகத்திலும், பெரும்பகுதிப் பதிவகத்திலும் பெற்ற அனுபவம் மேலதிக தகைமைகளாக கருதப்படும்.

4. **ஒப்பந்தத்தின் நியதிகள்**

(அ) நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரியது மான ஒரு நியமனம் உடையவர் விதவைகள், அநாதைகள் உபகாரச் சம்பளத்திட்டத்திற்கு நிதிகொடுக்க வேண்டி நேரிடும். இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரித்தில்லாத ஒரு நிரந்தர நியமனம் உடையவர், அரசாங்க சேவை சகாய நிதிக்கு நிதிகொடுக்க வேண்டி நேரிடும்.

(ஆ) பொது எழுதுநர் சேவையில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஒரு உத்தியோகத்தர் விடயமாக—

(i) முதல் சந்தர்ப்பமாக, இந்த நியமனம் ஒரு வருட காலத்திற்கு பதில் நியமன திறன் உடையதாக இருக்கும். இம்முதல்வருட காலத்தில் நியமனமுடையவருக்குத் தாபனச் சட்டக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின்படி பதில் சம்பளம் கொடுக்கப்படும்.

(ii) பதிவாளர் சேவையில் அவருடைய நியமனம் உறுதிப்படுத்தப்பட்டதும் அவர் பொது எழுதுநர் சேவையின் அங்கத்துவத்தை இழப்பதுடன், அச்சேவைக்கு திரும்பிச் செல்வதற்கு உரிமை அற்றவராகிவிடுவார்.

(இ) இந்த உத்தியோகத்தர், இத்திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் எல்லாவித நியதிச் சட்டங்களிலும், பிரமாணங்களிலும் உள்ள அவரது அறிவை சோதிப்பதற்காக திட்டப்பட்ட திணைக்களப்பரீட்சை ஒன்றில் சித்தி அடைய வேண்டி நேரிடும். இப்படி ஒரு பரீட்சையில் முன்பு சித்தி அடைந்திராவிட்டால் அவர் நியமனத்திலிருந்து ஒரு வருடத்தில் சித்தியடைய வேண்டும். கூறப்பட்ட அப்பரீட்சையில் சித்தியடையத் தவறினால், சம்பள ஏற்றம் நிறுத்தத்தில் முடிவடையும். நியமனத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் பரீட்சையில் சித்தியடைந்தால், சம்பள ஏற்றம் நியமன திகதியிலிருந்து கொடுக்கப்படும். இரண்டு வருடங்களுக்குள் பரீட்சையில் சித்தியடையத் தவறினால், பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட எடுத்த காலத்தினால், முதல் சம்பள ஏற்றம் பின்போடப்படும்.

(ஈ) திணைக்களத்திற்குள் எந்த நிலையத்திற்கோ, அல்லது பதிவுகாரர் சேவையின் பதவிக்கோ இவ்வுத்தியோகத்தர் மாற்றம் செய்யப்படுவர்.

(உ) இதுவரை ஆக்கப்பட்ட எந்தவிதிகளுக்கும் அல்லது முக்கியமாக 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தில் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்காகவும் அரசகரும மொழிக் கொள்கைக்குப் பயனளிக்கக்கூடியதற்காகவும் இன்றுமுதல் ஆக்கப்படக்கூடியவற்றிற்கும் இணங்க வேண்டிநேரிடும்.

5. இது சம்பந்தமான விண்ணப்பங்களும் ஏதும் அது சம்பந்த மான அறிவிப்புக்களும் பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண் டும். அமைச்சில் உள்ள உத்தியோகத்தர் எவர்க்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

6. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பகுதி I பிரிவு (II அ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவையின் பதவிகளுக்கான நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளிற்கு உமது கவனம் கோரப்படுகிறது.

பி. எச். சிறிவர்தன,
செயலாளர்,
பொது நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7.
1973.06.29.

விண்ணப்பப் படிவம்

பதிவாளர் சேவை தரம் I இன் பதிவாளர் பதவி

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்தில்)
குடும்பப் பெயர் :————.
மற்றைய பெயர் :————.
2. அலுவலக முகவரி :————.
3. பிறந்த திகதி :————.
4. (அ) விண்ணப்பதாரர் அரசாங்கத்தில் தற்போது வகிக்கும் பதவி :————.
(ஆ) வெவ்வேறு திணைக்களங்களில் சேவை செய்த காலங் கள் கொண்ட, அரசாங்கத்தில் சேவையாற்றிய காலம் :—.
(இ) (1) சேவையின் பெயர் :— ——.
(2) வகுப்பு/தரமும் அதிற் சேர்ந்த திகதியும் :————.
5. பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் வேலை களில் உள்ள அனுபவம் :————.
(ஏதாவது இருந்தால்)
6. (அ) சிங்கள மொழியில் தேர்ச்சியடைந்த மிகக்கூடிய பரீட்சை :————.
(ஆ) மொழி அறிவு :—
(i) தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.
7. ஏதாவது விசேட உரிமைக் கோரிக்கைகள் அல்லது தகை மைகள் இருந்தால் அவற்றின் விபரங்கள் :————.
8. மற்றைய ஏதும் பொருத்தமான விபரங்கள் :————.

என்னால் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும், செம்மையானவையும் என நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். என்னால் இங்கு கொடுக்கப்பட்ட விபரங் கள் பிழையானவையென என்று தெரிவிற்கு முன்பு கண்டுபிடிக் கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கு ஆளாவேனென்றும், நியமனத் திற்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் ஒரு ஈடுசெய்தலுமின்றி வேலையால் நீக்கப்படுவேனென்றும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

7–253/1—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

பதிவாளர் சேவை தரம் II இன் பதிவாளர் பதவிகள்

பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் பதிவாளர் சேவை தரம் II இன் பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திரட்டிய சம்பள அளவு : ரூபா 6,840—6×240—4×300—9,480 ரூ. (வருடாந்தம்)

2. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பம், கீழே கொடுக்கப்பட் டுள்ள மாதிரிப்படிவத்தில் எழுதப்பட்டு, விண்ணப்பகாரர் வேலை செய்யும் திணைக்களத்தின் தலைவர் மூலமாக 1973.08.14 ஆம் திகதிக்கோ அல்லது முன்பாகவோ இவ்வலுவலகத்தில் கிடைக் கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

3. **தகவுத்திறன்.**—நிறுவுதிறனும், நிர்வாக ஆற்றலுக்குமான சான்றுகளைக் காட்டியுள்ள பின்வரும் வகுப்பைச் சேர்ந்த உத்தி யோகத்தர்கள் விண்ணப்பிப்பதற்கு தகுதியுள்ளவர்களாவர்.

(அ) பொது எழுதுநர் சேவையில் வகுப்பு I இல் உள்ளவர்.

(ஆ) பொது எழுதுநர் சேவையில் வகுப்பு II இல் பிரிவு "அ" வில் வருடாந்த திரட்டிய சம்பளமாக ரூ. 5,160/- பெறு பவர்.

காணிப்பதிவகத்திலும், பெரும்பகுதிப் பதிவகத்திலும் பெற்ற அனுபவம் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

4. **ஒப்பந்தத்தின் நியதிகள்**

(அ) நிரந்தரமானதும், இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரியது மான ஒரு நியமனம் உடையவர் விதவைகள், அனாதை கள் உபகாரச் சம்பளத்திட்டத்திற்கு நிதிகொடுக்க வேண்டி நேரிடும். இளைப்பாற்றுச் சம்பளத்திற்கு உரிய தல்லாமல், ஒரு நிரந்தர நியமனம் உடையவர், அரசாங்க சேவை சகாய நிதிக்கு நிதிகொடுக்க வேண்டி நேரிடும்.

(ஆ) (i) முதல் சந்தர்ப்பமாக, இந்த நியமனம் ஒரு வருட காலத்திற்கு பதில் நியமன திறன் உடையதாக இருக்கும். இவ்முதல்வருட காலத்தில் நியமனமுடையவருக்கு தாப னச் சட்டக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின்படி பதில் சம்பளம் கொடுக்கப்படும்.
(ii) பதிவாளர் சேவையில் அவருடைய நியமனம் உறு திப்படுத்தப்பட்டதும் அவர் பொது எழுதுநர் சேவை யின் அங்கத்துவத்தை இழப்பதுடன், அச்சேவைக்கு திரும்பிச் செல்வதற்கு உரிமை அற்றவராகிவிடுவர்.

(இ) இந்த உத்தியோகத்தர், இத்திணைக்களத்தினால் நிர்வகிக்கப் படும் எல்லாவித நியதிச்சட்டங்களிலும், திணைக்கள விதி களிலும் பிரமாணங்களிலும் உள்ள அவரது அறிவை சோதிப்பதற்காக திட்டப்பட்ட திணைக்களப் பரீட்சை ஒன் றில் சித்தி அடையவேண்டி நேரிடும். இப்படி ஒரு பரீட் சையில் முன்பு சித்தியடைந்திராவிட்டால் அவர் நிய மனத்திலிருந்து ஒரு வருடத்தில் சித்தியடைய வேண் டும். கூறப்பட்ட அப்பரீட்சையில் சித்தியடையத் தவறி னால் சம்பள ஏற்றம் நிறுத்தத்தில் முடிவடையும். நிய மனத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் பரீட்சையில் சித்தியடைந்தால் சம்பள ஏற்றம் நியமன திகதியி லிருந்து கொடுக்கப்படும். இரண்டு வருடங்களுக்குள் சித்தியடையத் தவறினால், பரீட்சையில் சித்தியடைவ தற்கு ஒரு வருட காலத்திற்கு மேற்பட எடுத்த காலத்தி னால், முதல் சம்பள ஏற்றம் பின்போடப்படும்.

(ஈ) இந்த உத்தியோகத்தர் இத் திணைக்களத்திற்குள் எந்த நிலை யத்திற்கோ அல்லது பதிவாளர் சேவையின் பதவிக்கோ மாற்றஞ் செய்யப்படுவர்.

(உ) இந்த உத்தியோகத்தர் இதுவரை ஆக்கப்பட்ட எந்த விதி களுக்கும் அல்லது முக்கியமாக 1956 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்காகவும், அரசகரும மொழிக்கொள் கைக்கு பயனளிக்கக் கூடியதற்காகவும் இன்றுமுதல் ஆக் கப்படக்கூடியவற்றிற்கும், இணங்கவேண்டி நேரிடும்.

5. இது சம்பந்தமான விண்ணப்பங்களும் ஏதும் அது சம்பந்த மான அறிவிப்புக்களும் பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்படவேண் டும். அமைச்சில் உள்ள உத்தியோகத்தர் எவர்க்கும் தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

6. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பகுதி I பிரிவு (II அ) இல் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவையின் பதவிகளுக்கான நியமனங்களுக்கு பொருத்தமான பொது நிபந்தனைகளுக்கு உமது கவனம் கோரப்படுகிறது.

பி. எச். சிறிவர்தன,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 7.
1973, ஆடு யூன் 29 ந் திகதி.

**விண்ணப்பப் படிவம்**

பதிவாளர் சேவை தரம் II இன் பதிவாளர் பதவி

1. முழுப் பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)
குடும்பப் பெயர் :————.
மற்றைய பெயர்கள் :————.

2. அலுவலக முகவரி :————.

3. பிறந்த திகதி :————.

4. (அ) அரசாங்கத்தில் தற்போது வகிக்கும் பதவி :————.
(ஆ) வெவ்வேறு திணைக்களங்களில் சேவை செய்த காலங்கள் கொண்ட, அரசாங்கத்தில் சேவைபார்த்த காலம் :—.
(i) பொது எழுதுநர் சேவையில் வகுப்பு (I) அல்லது வகுப்பு II பிரிவு "அ" இல் உள்ளவரா :————.
(ii) பொது எழுதுநர் சேவை வகுப்பு II பிரிவு "அ" இல் உள்ளவராயின் தற்போது பெறும் திரட்டிய சம்பளம் :————.

5. பதிவாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்தின் வேலைகளில் உள்ள அனுபவம் :————.
(ஏதாவது இருந்தால்)

6. (அ) சிங்களம் மொழியில் தேர்ச்சியடைந்த மிகக்கூடிய பரீட்சை :————.
(ஆ) மொழி அறிவு :————.
(i) தமிழில் :————.
(ii) ஆங்கிலத்தில் :————.

7. ஏதாவது விசேட உரிமைக் கோரிக்கைகள் அல்லது தகைமைகள் இருந்தால் அவற்றின் விபரங்கள் :————.

8. மற்றைய ஏதும் பொருத்தமான விபரங்கள் :————.

என்னுல் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவையும், செம்மையானவையும் என நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். என்னுல் கொடுக்கப்பட்ட விபரங்கள் தப்பானவை என்று தெரிவிற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டால் தகைமை நீக்கத்திற்கு ஆளாவேனென்றும், நியமனத்திற்குப் பின் கண்டு பிடிக்கப்பட்டால் ஒரு ஈடுசெய்தலுமின்றி வேலையால் நீக்கப் படுவேனென்றும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-253/2—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**காணிச் சீர்திருத்த ஆணைக்குழு**

பதவிகள் வெற்றிடம்

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் சேவையில் பின்வரும் தற்காலிக பதவிகளுக்கான வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அ. I பதவி.—பணிப்பாளர் (நிதி).—ஆணைக்குழுவின் சேவைத் தரம் II

2. வேதன அளவுத்திட்டம்.—ரூபா 1,500—10×50—ரூபா 2,000/-

3. வயது.—27.07.1973 ம் திகதியன்று 30 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

4. தகைமைகள்.—அரசாங்க திணைக்களத்தில் கூட்டுத்தாபனத்தில் அல்லது வர்த்தக நிறுவனத்தில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ள சாட்டட் கணக்காளராகவோ அல்லது கொள்விலை முகாமைக் கணக்காளராகவோ அல்லது நிர்வாக கல்விக் கழகத்தினுல் வழங்கப்பட்ட பொது நிதி நிர்வாக சான்றிதழ் பெற்ற தரம் I அல்லது II கணக்காளர் சேவையிலுள்ள கணக்காளராகவோ இருத்தல் வேண்டும்.

ஆ. 1. பதவி.—சட்ட உத்தியோகத்தர்—ஆணைக்குழுவின் சேவைத் தரம் III

2. வேதன அளவுத்திட்டம்.—ரூபா 1,250—10×50—1,750

3. வயது.—27.07.1973 ம் திகதியன்று 30 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. தகைமைகள்.—10 வருட தொழில் அனுபவமுள்ள வழக்கறிஞராகவும் அத்துடன் நொத்தாரிசு வேலையில் பரந்த அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(குறிப்பு.—அரசாங்க சேவை, சபைகள், கூட்டுத்தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அனுபவம் சம்பந்தமான நிபந்தனைகள் இல்லை)

பொது நிபந்தனைகள்

1. அனுபவத்திற்கும் தகைமைகளுக்கும் ஏற்ப விண்ணப்பதாரிகள் வேதன அளவுத்திட்டத்தின் பொருத்தமான நிலையில் அமர்த்தப்படுவர்.

2. அரசாங்க சேவை, சபைகள், கூட்டுத்தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்கள, சபை, கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

3. அரசாங்க சேவை, சபைகள், கூட்டுத்தாபனங்களிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு வயது சம்பந்தமான நிபந்தனைகள் தளர்த்தப் படலாம்.

4. ஆணைக்குழுவின் சேவையிலுள்ள அலுவலர்களுக்கு உள்ள நிபந்தனைகள் தேர்ந்து எடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கும் பொருந்தும்.

5. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டிருக்கு மாதிரிப்படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பங்கள் 27.07.1973 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ ஆணைக்குழுவிற்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படவேண்டும்.

தலைவர்,
காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுப்பணிமனை,
த. பெ. எண். 1526,
சீ. 82 கிறக்கறிஸ் வழி,
கொழும்பு-7,
04.07.1973.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

1. விண்ணப்பிக்கும் பதவி :————.
2. முழுப் பெயர் (சொந்தப் பெயர் முதலில்):————.
3. அஞ்சல் முகவரி :————.
*4. பிறந்த திகதி :————.
5. விண்ணப்பம் கோரும் நாளில் வயது :—
வருடம்————. மாதம்————. நாள்————.
6. சாதியம் :————.
*7. தகைமைகள் :————.
(i) கல்வித்தகைமை (சித்தியெய்திய பாடங்கள், திகதி, நிறுவனத்தின் பெயர்) :————.
(ii) தொழில் தகைமை (சித்தியெய்திய திகதியும், நிறுவனத்தின் பெயரும்) :————.
*8. பதவி விபரம் :—(வகித்த பதவிகளின் முழுவிபரங்களையும் அவற்றிற்காக பெற்ற வேதன விபரங்களையும் குறிப்பிடுக):————.
*9. அனுபவம் :————.
*10. பிற திறமைத் தகைமைகள் :————.
*11. சிங்கள மொழித் தேர்ச்சி :————.

விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவை என்றும், இவைகள் யாவும் பத்திர அத்தாட்சி மூலம் நிரூபிக்க முடியும் என்றும் உறுதியளிக்கிறேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப் படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப் படுவதற்கும், நியமனத்திற்கு பின்னராயின் எவ்வித இழப்பீடுமின்றி வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாக வேண்டுமென்பதையும் நான் அறிவேன்.

————
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

*(தகைமைகளை நிரூபிக்கக் கூடிய அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.)

7-430—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

### கட்டடங்கள் திணைக்களம்

தொழில் பயிலுநர் படவரைஞர்கள் பதவிகள்

மேற்படி பதவிகளுக்காய விண்ணப்பங்கள் கோருதல் சம்பந்தமாக 22.6.73 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பாக மேலும் தருவதாவது:

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1973, ஆடி மாதம் 17 ஆம் திகதி வரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

யே. பீ. வீரரத்ன,
கட்டடங்கள் பணிப்பாளருக்காக.

1973.7.3.

7-360—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

### கட்டடங்கள் திணைக்களம்

கண்காணிப்பு ஓவசியர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்காய விண்ணப்பங்கள் கோருதல் சம்பந்தமாக 14.6.73 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் தொடர்பாக மேலும் தருவதாவது.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 1973, ஆடி மாதம் 16 ஆம் திகதிவரைக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர்.

கட்டடங்கள் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் வரு. ஆடி மாதம் 2 ந் திகதி.

7-388—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### நெல் சந்தைப்படுத்தல் சபை

உதவிக் கணக்காளர் (தரம் IV)

மேற்குறிப்பிட்ட பதிவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கல்விச்சான்றிதழ், பிறப்புப் பதிவுச்சான்றிதழ் குணச்சான்றிதழ்களின் பிரதிகளுடன் கீழே கையொப்பமிட்டவரின் முகவரிக்கு 1973.7.27 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலின் இடதுபக்க மேல் மூலையில் " உதவிக் கணக்காளர் " எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தகைமைகள்.**—பட்டயம் பெற்ற கணக்காளர் பரீட்சையில் நடுத்தரப் பரீட்சை அல்லது ஆக்கச் செலவு வேலைகள் கணக்காளர் பகுதி 1, 2, 3 ல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பரீட்சையின் பின் இரு வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். உள்ளகக் கணக்குப் பரிசோதனையில் அனுபவம் பெற்றவர்களுக்கு முதலுரிமை வழங்கப்படும்.

**சம்பளம்.**—ரூபா 800—10 × 40—6 × 50—1,500. சம்பளத் திட்டம் ரூபா 1,200 க்கு மேல் பெறுவதற்கு பூரண தொழிற் தகைமை பெறல் வேண்டும்.

**வயது.**—விண்ணப்ப முடிவு திகதியன்று 50 வயதுக்கு மேற்படாமல் இருக்க வேண்டும். சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்க திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாடு அமையாது.

பொது நியதிகள்

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) தேர்வுபெற்றோர், 1956 ம் ஆண்டின் 33 ம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்போது உள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(இ) சபைகள்/கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசாங்க திணைக்களங்களில் உள்ள ஊழியர்கள், தங்கள் விண்ணப்பங்களை, முறையே தங்கள் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரிபாலன முகாமையாளர்,
நெல் சந்தைப் படுத்தல் சபை.

இல. 5, எலிபாங்கு வீதி,
கொழும்பு 5,
1973.6.28.

7—383—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

தொழில்நுட்ப உதவியாளர் பதவி (பாறையியற் பரிசோதனைச் சாலை)

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க் கொடுக்கப்பட்ட படிவத்தில், அதிபர், பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம், 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என முகவரியிட்டு 1973 ஆகஸ்டு 31 ம் திகதியிலன்றோ அல்லது அதற்கு முன்போ கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **தொழில் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. நியமிக்கப்படுபவர் அரசாங்கசேவை சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தவேண்டும். இந்நியமனமானது முதல் மூன்று வருடத்தைத் தகுதிகாண்காலமாக உடையதாகும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பூகற்ப ஆராய்ச்சித் திணைக்கள ஆணையாளரால் மேற்கொள்ளப்படும் பயிற்சியைப் பெறுமாறு வேண்டப்படுவர்.

**குறிப்பு.**—இளைப்பாறுச் சம்பளம் பெறும் பதவியிலுள்ளவர் தெரிந்தெடுக்கப்பட்டால் அவர் புதிய பதவியில் முதல் ஒரு வருடகாலத்திற்கு பதிற்கடமையாளராக நியமிக்கப்படுவார்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—ரூபா 5,736—6 × 144, 8 × 180 ம் 6 × 240—ரூபா 9,480 வரை உயர்வதுடன் ரூபா 6,780, ரூபா 7,500 ரூபா 8,280 க்கு முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

தெரியப்பட்ட அபேட்சகரின் தகுதியையும், அனுபவத்தையும் கவனித்து திறைசேரியின் ஆலோசனையுடன் அவருக்கேற்ற சம்பளத் திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை யுடையார் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.:—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியினாலோ அல்லது பதிவினாலோ இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.

(இ) 1973 ஆகஸ்டு 31 ம் திகதியில் 20 வயதிற்குட்படாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்) ;

(ஈ) அங்கீகாரம் பெற்ற ஒரு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானப் பட்டதாரிப் (பொது) பரீட்சையில் தூய அல்லது பிரயோக கணிதத்திலோ அல்லது கணிதத்துடன் பௌதிகவியல் அல்லது இரசாயனவியல் பாடங்களுடன் சித்தியடைந்திருத்தல் வேண்டும். புவிவரலாற்றியலை ஒரு பாடமாக எடுத்துச் சித்தியடைந்திருந்தால் அல்லது பரிசோதனைச்சாலை அனுபவமும் புவியியலில் அல்லது அதையொத்த விஞ்ஞானத்துறையில் தொழில்நுட்ப அனுபவமும் இருப்பவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

(உ) பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்தில் கடமையாற்றும் வெளிக்கள உதவியாளரும், பரிசோதனைச்சாலை உதவியாளரும் 15 வருடச் சேவைக்குக் குறையாமல் கடமையாற்றியிருந்தால் அவர்களின் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (**முக்கிய குறிப்பு.**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிலுக்குரிய சான்றிதழ் அல்லது தொழில் நுட்பத் தகைமைச் சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ் ;

குறிப்பு : (1) சாதனங்களையாயினும் அவற்றின் நகல்களையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. திணைக்கள ஆணையாளர்களுக்கூடாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் குறித்த திகதிக்குப் பின் இங்கு கிடைத்தால் அவ் விண்ணப்பங்கள் அத்திணைக்கள் ஆணையாளரிடம் குறித்த திகதிக்கு முன் கிடைத்தன என்றும் அதை ஏற்குமாறு தாமதத்திற்கு தகுந்த நியாயங் காட்டத் தவறினால் அவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. அபேட்சகர்கள் இத்திணைக்களத்தில் குறித்த நேரம், திகதியில் நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு வேண்டப்படுவர். இதற்காகிய பயணச்செலவு எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

8. விண்ணப்பங்கள் திணைக்கள ஆணையாளர், பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம் என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (IIஅ) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

டீ. பீ. பட்டியாராச்சி,
ஆணையாளர்,
பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்.

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்,
48, ஸ்ரீ ஜினரத்தின பாதை,
கொழும்பு 2,
1973யூன் 28.

### மாதிரிப் படிவம்

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்—தொழில் நுட்ப உதவியாளர் பதவி

1. முழுப்பெயர் :————.
 (உறுப்பெழுத்தில்)
 (அ) பெயர் :————.
 (ஆ) மறுபெயர் :————.

2. தபால் விலாசம் :————.
 (விலாச மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படல் வேண்டும்.)

3. (அ) பிறந்த திகதி :————.
 (ஆ) 1973 ஆகஸ்டு 31 ம் திகதியில் வயது :————.

4. தேசிய இனம் :————.
 (வம்சாவழி அல்லது பதிவுப் பிரஜையா எனக் குறிப்பிடுக. பதிவுப்பிரஜையாயின் பதிவுப் பத்திர தொடர்பு இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

5. பிறந்த இடம் :————.
 (அ) விண்ணப்பகாரர் :————.
 (ஆ) தகப்பன் :————.
 (இ) தகப்பன் வழிப் பேரன் :————.
 (ஈ) தகப்பன் வழிப் பூட்டன் :————.
 (விண்ணப்பகாரர் ஸ்ரீ லங்காவில் பிறந்திருந்தால் (ஆ) அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக. அவர் ஸ்ரீ லங்காவில் பிறக்காவிடின் (ஆ) யும் (இ) யும் அல்லது (இ) யும் (ஈ) யும் (அ) வோடு நிரப்புக)

6. விண்ணப்பகாரர் விவாகமானவரா ? தனிப்பட்டவரா ? தாரமிழந்தவரா :————.

7. இழ்க்காணும் தகைமைகளைப் பெறுவதற்குப் படித்த பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சேர்ந்த திகதியும் விலகிய திகதியும் :————.
 (அ) பொதுத்தராதரம் :————.
 (ஆ) உயர் தொழில் கல்வி :————.

8. விளையாட்டுத் துறையில் நீர்பெற்ற சிறப்புகள் (ஏதும் இருப்பின்) :————.

9. (அ) நீர் கடன் தொல்லை இல்லாதவரா—இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவுகள் :————.
 (ஆ) சட்டநீதி மன்றங்களில் ஏதாவது குற்றப் பாதகத்துக்கு குற்றம் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியாயின் வழக்கு இலக்கத்தை எடுத்துக்காட்டி, திகதிகளோடு முழு விபரங்களையும் குறிக்குக :————.

10. பாடசாலைக் கல்வி, உயர்தொழிற் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.
 (பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உயர் தொழிற் கல்வி/அல்லது நுண் தொழிற் தகைமைகள் முதலியவற்றின் விபரங்களைச் சித்தியெய்திய திகதியுடன் வகுப்புத் தரம் ஏதாவது பெற்றிருந்தால், எடுத்த பாடங்கள், கல்வித்தாபனப் பெயர்கள் ஆகியனவும் தயவுசெய்து தருக)

11. இப்போதைய தொழிலும், முன்பேதேனும் பதவிகளிலிருந்தால் அவ்விபரங்களையும் தருக :————.

12. விசேட உரிமைகள், தகைமைகள், பயிற்சிகள், அனுபவங்கள் ஏதும் இருந்தால் அவைகளின் விபரங்களைத் தருக :————.

13. மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் அளிக்கக்கூடிய தகைமையாளரின் பெயர்களையும், விலாசங்களையும், பதவிப் பெயர்களையும் தருக :
 1.
 2.
 3.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்று தெரிவுசெய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாகக் காணப்படுவேனென்றும், நியமனம் பெற்ற பிற்பாடு சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியால் நீக்கப்படுவேனென்றும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

இடம் :————. திகதி :————.

7-274—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### சிவில் வான்செலவுத் திணைக்களம்

### வானூர்திப் போக்குவரவுக் கட்டுப்பாட்டாளர் பதவி (தரம் II)

சிவில் வான்செலவுத் திணைக்களத்திலுள்ள வானூர்திப் போக்குவரவுக் கட்டுப்பாட்டாளர் (தரம் II) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் விண்ணப்பம் செய்து, சிவில் வான்செலவுப் பணிப்பாளர், அ. அ. பெ. 535, உலோட்டஸ் வீதி, கொழும்பு 1 எனும் முகவரிக்கு 1973.08.03 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்புதல் வேண்டும்.

2. வேதனமும் இதர படியும்.—இப்பதவிக்குரிய திரட்டிய வேதனம் வருமாறு :—ஆண்டொன்றுக்கு ரூபா 5,736—6 × 144—8 × 180 — ரூபா 8,040/- ஆகும்.

3. வயது.—1973.08.03 அன்று 21 ஆண்டுகளுக்குக் குறையாதவராயும், 30 ஆண்டுகளுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மேற்கூறிய வயதெல்லை பொருந்தா.

4. விண்ணப்பக்காரர்களிடமிருந்து கோரப்படும் கல்வி மற்றும் தகைமைகள்.—

(அ) (i) ஆங்கிலம், பௌதிகவியல், (தூய அல்லது பிரயோக) கணிதம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடைய சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் அத்துடன் தடையின்றி சிறந்த முறையில் ஆங்கிலமொழி பேசத்தக்க தகைமையும்.

அல்லது

(ii) (தூய அல்லது பிரயோக) கணிதம், பௌதிகவியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுள்ள கல்விப் பொதுத் தராதரச் (சாதாரண) சான்றிதழும்.

(iii) (தூய அல்லது பிரயோக) கணிதம், பௌதிகவியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியும் மற்றும் 3 பாடங்களில் சாதாரண சித்தியுமுடைய கல்விப் பொதுத் தராதர (சாதாரண) சான்றிதழ் அத்துடன் தடையின்றி ஆங்கிலமொழி பேசத்தக்க தகைமையும் வேண்டும். இவ்வாறு பாடங்களும் அல்லது குறைந்தது ஐந்து பாடங்களாவது ஒரே பரீட்சையில் ஒரே வேளையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(iv) வேறு ஒத்த அல்லது உயர்ந்த கல்வித் தகைமையும். அத்துடன்,

(ஆ) அ (i) வர்த்தக வலவன் உத்தரவுச் சீட்டு அல்லது தனிப்பட்ட வலவன்கள் உத்தரவுச்சீட்டும்

அல்லது

(ii) வானூர்தி வலவனுக குறைந்தது 500 மணித்தியாலங்கள் கொண்ட வானூர்தி அனுபவமுள்ள வானூர்தி வலவன் உத்தரவுச் சீட்டும்.

அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ள வானூர்திப் போக்குவரவுக் கட்டுப்பாட்டுத் தகுதிச் சான்றிதழும்.

(இ) மேற்கூறிய பந்தி 4 (ஆ) வில் விதிக்கப்பட்ட தகைமைகள் இல்லாத போதும் பௌதிகவியல் அல்லது கணிதத்தில் சித்தியடைந்த விஞ்ஞான பட்டதாரிகளும் இப்பதவிக்கு விண்ணப்பம் செய்யலாம்.

5. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் அடிப்படையில் பணிபுரிவர். மேலும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பொதுச் சேவை சேமலாபநிதிக்குக் கொடுப்பனவு செலுத்துமாறு வேண்டப்படுவார்.

குறிப்பு :—(i) 31.12.1971 ஆந் தேதியன்று அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியை வகித்து வந்த அரசாங்க அலுவலர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் புதிய பதவியிலும் தொடர்ந்து தனது ஓய்வூதிய உரிமையை அனுபவித்து வருவார்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரிமையுடையதுமான பதவியொன்றை வகித்துவரும் அரசாங்க சேவை ஊழியராகவிருப்பின், முதற்கண், அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்தப் பதவியில் பதில் அடிப்படையில் பணிபுரிவார்.

6. பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். இப்பிரதிகள் அபேட்சகர்களுக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா. அபேட்சகர் சகல மூலச் சான்றிதழ்களையும், சாதனங்களையும் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும். இத்தகைய சான்றிதழ்கள் அல்லது சாதனங்களை சமர்ப்பிக்கத் தவறினல் இவர் தகைமையற்றவரெனக் கருதப்படுவர்.

(அ) பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ். (ஞானஸ்நானச் சான்றிதழ்கள் அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிக் கோவையின் நோக்கத்திற்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)

(ஆ) உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு.

(ஈ) தொழினுட்பத் தகைமையும் மற்றும் முன் அனுபவமும் பற்றிய சான்றிதழ்கள்.

அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் (II அ) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளது. அவற்றைப் பார்க்கவும்.

விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் சிவில் வான்செலவுப் பணிப்பாளர் எனும் முகவரிக்கே அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர் எவருக்காவது நேரடியாக அனுப்பலாகாது.

சி. வி. எம். அப்பொன்சோ,
சிவில் வான்செலவுப் பணிப்பாளர்.

அ. அ. பெ. 535,
உலோட்டஸ் வீதி,
கொழும்பு 1.

**விண்ணப்பப் படிவம்**

வானூர்திப் போக்குவரவுக் கட்டுப்பாட்டாளர் பதவி (தரம் II)

1. முழுப் பெயர் :————.
(தனி எழுத்துக்களில்)
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த திகதியும் வயசும் :————.
4. (i) பரம்பரை மூலம் :————.
(ii) பதிவு மூலம் :————.
இலங்கைப் பிரசையா என்பதைக் கூறவும் :————.
5. சித்தியெய்திய உயர்ந்த பரீட்சை :————.
(சித்தியடைந்த பாடங்களின் விவரங்களைக் குறிப்பிடவும்)
6. சித்தியெய்திய தொழினுட்பப் பரீட்சை :————.
7. அனுபவம் :————.
8. ஏதாவது விசேட தகைமைகள், கோரிக்கைகள் இருந்தால் விவரங்களைக் குறிப்பிடவும் :————.
9. தற்போதைய/முன்னைய தொழிலின் விவரங்களைக் குறிப்பிடவும் :————.

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் முழுவதும் சரியானதும் உண்மையானதுமென நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விவரங்களில் எவையேனும் உண்மையற்றவையென நான் தெரிவு செய்யப்படுவதற்குமுன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவேன் எனவும், தெரிவு செய்யப்பட்ட பின் காணப்படின் நட்டஈடின்றி சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-313—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**கெடமான்ன பகுதிக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவி**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கலை பகுதி உதவி அரசாங்க அதிபர் தொகுதிக்கு கெடமான்ன பகுதிக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஆகஸ்ட் 14 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இதற்கு பின் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

அதிகாரப் பகுதி

1. இல. 483—கொடவெல கிராம சேவகர் பகுதி ;
2. இல. 481A—அம்பல கிராம சேவகர் பகுதி ;
3. இல. 481—மஹஹீல்ல கிராம சேவகர் பகுதி ;
4. இல. 476—துடாஹீல்ல கிராம சேவகர் பகுதி ;
5. இல. 487—கெடமான்ன வடக்கு கிராம சேவகர் பகுதி ;
6. இல. 487A—கெடமான்ன தெற்கு கிராம சேவகர் பகுதி

2. நிரக்கமான சம்பளம் இப்பதவிக்குக் கிடையாது. திடீர் மரணங்களின் போது இடம் பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10 தரப்படும். இதற்கு கூடுதலாக தாபன குறியீட்டில் குறிப்பிட்டிருப்பது போல் பயணப்படியும் உணவுப் படியும் கொடுக்கப்படும்.

3. தகைமைகள்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—
(அ) விண்ணப்ப முடிவு திகதியின்போது 30 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு உட்பட்டவராகவும் ;
(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும் ;
(இ) மேல் குறிக்கப்பட்ட பகுதியில் நிரந்தரப் பிரஜையாகவும் ;

(ஈ) 1925 ம் ஆண்டிற்கும் 1944 ம் ஆண்டுகளுக்கு மிடையே சிங்கள பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்களப் பாடத்துடன் ஆங்கிலப் பாடசாலை விடுகைப் பரீட்சையில் அல்லது சிங்களப் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் அல்லது அதற்குச் சமமான பரீட்சை அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆகக் கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள் (இதிலொன்று கிராம சேவகரிடம் கிடைத்ததாக வேண்டும்)

(ஈ) நிரந்தர பிரஜையை நிரூபிக்க கிராம சேவகரின் நற்சான்று.

5. அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களினதும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினதும் விண்ணப்பங்கள் இப் பதவிக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

டீ. எச். ஜே. அபேகுணசேகர,
அம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
அம்பாந்தோட்டை,
1973, ஜூலை மாதம் 02 ந் திகதி.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

**கெடமான்ன பகுதிக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவி**

1. (அ) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்).

(ஆ) குடும்பப் பெயர் :————.

(இ) மற்றப் பெயர் :————.

(ஈ) விலாசம் :————.

2. நிரந்தர வசிப்பிடமும் வதியும் கால எல்லையும் :————.

3. (அ) 1973.08.14 திகதியின் போது வயது :————.
வருடம் :————. மாதம் :————. திகதி :————.

(ஆ) பிறந்த திகதியும் இடமும் :————:

4. விவாகமானவரா, அல்லது விவாகமாகாதவரா :————.

5. கல்வித் தகைமைகள் :————.

6. தற்போதைய தொழில் :————.

7. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் : ————.

8. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :————.

9. விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :————.

10. இப்பதவிக்குத் தேவையான வேறு விஷேச தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னுற் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியற்றவையெனத் தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப் படுவேன் என்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேற் குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவை யென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

7-390—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**புத்தூர் கிராமச் சபைப் பிரதேசத்திற்கு சடுதிமரண விசாரணையாளர் பதவி**

புத்தூர் கிராமச் சபைப் பிரதேசத்திற்கு சடுதி மரண விசாரணையாளர் ஒருவரை நியமிக்கவிருப்பதனுல் அக்கிராமச் சபைப் பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவரிடமிருந்து மாத்திரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

2. அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களினதும் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகளினதும் 30.07.73 திகதியன்று 30 வயதுக்குக் குறைந்தவர்களிடமிருந்தும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

3. சகல விண்ணப்பதாரர்களும் கீழ்க்காணும் விபரங்களையும், சான்றுப் பத்திரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. முழுப் பெயரும் விலாசமும் :————.

2. வசிக்கும் இடம் :————.

3. வயதும் பிறந்த திகதியும் :————.

4. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.

5. கல்வித் தகைமைகள் :—.
தமிழ் :————.
ஆங்கிலம் :————.

6. தற்போது வகிக்கும் பதவி அல்லது முன்பு வகித்த பதவிகள் : ————.

7. சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள், (பிரதிகள்)

எம். ரி. டபிள்யூ. அமரசேகரா,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி யாழ்ப்பாணம்,
1973.6.26.

7-269—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

**நீதி அமைச்சு**

**இலஞ்ச ஆணையாளர் திணைக்களத்திலுள்ள சிரேட்ட ஆய்வுத்தியோகத்தர் பதவிகள்**

இலஞ்ச ஆணையாளர் திணைக்களத்திலுள்ள உதவி சிரேட்ட ஆய்வுத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் 1973 ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

குறிப்பு.—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையைத் தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப்படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது, அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை. 1971.12.24 ஆந் தேதிய 42 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கை தொடர்பானது.

3. சம்பளம்.—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—ஆண்டுக்குத் திரட்டிய சம்பளம் ரூபா 9,240 ஆகத் தொடங்கி, ரூபா 360 இல் ஐந்தும் ரூபா 480 இல் பதினொன்றும் ஆண்டு ஏற்றங்களாகக் கொண்டு, ஆண்டுக்கு ரூபா 16,320 வரை செல்லும். 1.10.69 க்கு முன்னர் இப்பதவிக்குரிய அடிப்படைச் சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,480—360×8, 480×8—13,200 ஆகும்.

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1973.08.10 இல் 20 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களைப் பொறுத்தவரையில் வயதின் மேல் எல்லை கவனிக்கப்படமாட்டாது) ;

(இ) (i) ஒரு பொலிசு உத்தியோகத்தராகக் குற்றவியல் நுண்ணாய்வுத் தொழில் புரிந்த அனுபவம் உடையவராகவும், 10 ஆண்டுகளுக்குக் குறையாத காலத்துக்குப் பொலிசுச் சோதனைகாரர் ஒருவருக்குக் கீழ்ப்படாத வரிசைப் பதவியொன்றை வகித்தவராகவும் இருத்தல் வேண்டும் ; (நுண்ணாய்வுகளை நடத்தும் திறமையுடன் இலஞ்ச நுண்ணாய்வுத் தொழிலில் அனுபவமுடைய பொலிசு உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.)

(ii) சிங்களத்தில் நல்ல அறிவுடையவராக இருத்தல் வேண்டும். தமிழறிவு மேலதிகத் தகைமையாகக் கவனிக்கப்படும்.)

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பட்டதாரி அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) தொழில் நுட்பத்தகைமை அல்லது தொழிற்றகைமை பற்றிய சான்றிதழ் ;

(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையில் அல்லது கூட்டுத்தாபனங்களிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களங்களின் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை நீதி அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும், அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், நீதி அமைச்சு, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானி I ஆம் பகுதி, (II அ) ஆம் தொகுதியில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

நிகால் ஜயவிக்கரம,
நீதி அமைச்சின் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 யூலை 2 ஆம் நாள்.

7–435—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 46 68

---

## வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலுள்ள வெற்றிடங்கள்

### சுருக்கெழுத்தாளர் பதவிகள்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலுள்ள சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கு, (வெளிநாடுகளிலுள்ள தூதரகங்களில் முன்னர் சேவை புரிந்துள்ளோர் உட்பட) தத்தமது நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட மாற்றம் பெறற்பாலரான (ஆங்கில மொழி) சுருக்கெழுத்தாளர் சேவையின் உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பெற்ற படிவத்தின்படி அமைந்தவாறான விண்ணப்பங்கள், திணைக்களத் தலைவருக்கு ஊடாக அனுப்பப்படுவதுடன், கடல்கடந்த சேவைக்கு விண்ணப்பதாரரின் தகுதிபற்றியும், விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரது தற்போதைய நியமனத்திலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட முடியும் எனவும் விண்ணப்பத்திற் கொடுக்கப்பட்ட விபரங்கள் சரியானவை எனவும் கூறும் புறக்குறிப்பொன்றை விண்ணப்பதாரர் சேவையாற்றிக்கொண்டிருக்கும் திணைக்களத் தலைவரிடமிருந்து கொண்டனவாக இருத்தல் வேண்டும்.

3. சிங்களத் தட்டெழுத்து அறிவு உடைய விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை அளிக்கப்பெறும்.

4. இப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பெறும் அலுவலர்களும் அவர் தம் குடும்ப உறுப்பினர்களும் கடல்கடந்த சேவைக்குரிய உடல்நலத்தகுதி உடையரா என்பதனை அறிதற்பொருட்டு ஒரு வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுமாறு வேண்டப்படுவர்.

5. தெரிவு செய்யப்பெறும் அலுவலர்கள் முதற்கண் ஒரு நான்கு (4) ஆண்டு காலவெல்லைக்குக் கடல்கடந்த சேவை புரியுமாறு வேண்டப்படுவர்.

6. இப்பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பெறும் அலுவலர்கள் தமது தற்போதைய உத்தேச அடிப்படைச் சம்பளங்களைத் தொடர்ந்து பெறுவதுடன், மேலதிகமாக இலங்கையில் இருக்கப்படற்பாலதான திரட்டப்பட்ட சம்பளத்துடன் கூடிய திருமணமானோர் படிக்குப் பதிலாக, ஒரு கடல்கடந்த படியை இறுக்கப் பெறுவர். ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் கடல்கடந்த சேவைப் பிரமாணக் குறிப்புகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறேயாம்.

7. இதற்குமுன்னர் இவ்வமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்பெறா.

8. விண்ணப்பங்கள் 73.07.31 ஆம் திகதியன்றோ அதற்கு முன்போ என்னை வந்தடைதல் வேண்டும்.

வி. எல். பீ. மென்டிஸ்,
வெளிநாட்டலுவல்கள்
பணிப்பாளர்-தலைமையதிபதி.

பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள்
அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு-1, 1973, யூலை 5.

### அட்டவணை

1. விண்ணப்பதாரரின் சொந்தப் பெயர் முதலில் வருமாறு அவரது முழுப் பெயர் (பெரிய, தெளிவான எழுத்துக்களில்) :————.

2. (அ) பிறப்புத் திகதி :————.

(ஆ) 1973. யூலை 31 ஆம் திகதியன்று வயது :—
ஆண்டுகள் :————  மாதங்கள் :————.

3. முகவரி :—

(அ) அலுவலகம் :————.

(ஆ) சொந்த முகவரி :————.

4. தேசிய இனம் :————.

5. திருமணமானவரா அல்லவா :————.

6. திருமணமானவராயின் குழந்தைகளின் எண்ணிக்கை :——

7. கல்வித் தகைமைகள் :————.

8. (அ) மாற்றப்பெறற்பாலரான சுருக்கெழுத்தாளர் சேவைக்கு நியமிக்கப்பெற்ற திகதி :————.

(ஆ) உறுதிப்படுத்தப்பட்ட திகதி :————.

(இ) தற்போதைய தரம் :————.

9. தற்போதைய ஆண்டுச் சம்பளம் :—

(அ) திரட்டப்பட்டது :————.

(ஆ) உத்தேச அடிப்படைச் சம்பளம் :————.

10. விண்ணப்பதாரரின் விரைவு :—

(அ) ஆங்கிலச் சுருக்கெழுத்தில் :————.

(ஆ) ஆங்கிலத் தட்டெழுத்தில் :————.

11. தற்போதைய கடமைகளின் தன்மை :————.

12. விண்ணப்பதாரரின் தேர்ச்சி :—

(அ) சிங்கள மொழியில் :————.

(ஆ) சிங்களத் தட்டெழுத்தில் :————.

13. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றியுள்ள இலங்கைத் தூதரகங்களும் கால்வெல்லைகளும் :————.

14. எவையேனும் பிற தகைமைகள் :————.

மேலே தரப்பட்டுள்ள தகவல் சரியானது என நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

7-481—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### தலாவ பகுதிக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவி

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிழக்கு கிருவாபத்து பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் பகுதிக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கீழே தரப்படும் மாதிரி விண்ணப்பப் பத்திரப் பிரதியில் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஆகஸ்ட் 14 ந் திகதியிலோ அன்றி அதற்கு முன்னதாகவோ அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இதற்கு பின் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

#### அதிகாரப் பகுதி

1. இல. 571—தலாவ கிராம சேவகர் பகுதி
2. இல. 580—தபரெல்ல கிராம சேவகர் பகுதி
3. இல. 583—தெபொக்காவ கிராம சேவகர் பகுதி

2. தீர்க்கமான சம்பளம் இப்பதவிக்குத் கிடையாது. திடீர் மரணங்களின் போது இடம் பெறும் ஒவ்வொரு மரண விசாரணைக்கும் ரூபா 10/- தரப்படும். இதற்கு கூடுதலாக தாபன குறியீட்டில் குறிப்பிட்டிருப்பதுபோல் பயணப் படியும் உணவுப் படியும் கொடுக்கப்படும்.

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்.—

(அ) விண்ணப்ப முடிவு திகதியின் போது 30 வயதுக்கு மேற்பட்டவராகவும் 60 வயதிற்கு உட்பட்டவராகவும்,

(ஆ) சிறந்த நல்லொழுக்கமும், உடலுறுதியும் உடையவராகவும்.

(இ) மேல் குறிக்கப்பட்ட பகுதியில் நிரந்தரப் பிரஜையாகவும்

(ஈ) 1925 ம் ஆண்டிற்கும் 1944 ம் ஆண்டுகளுக்குமிடையே சிங்கள பாடசாலை விடுகைப் பத்திரப் பரீட்சையில் அல்லது சிங்களப் பாடத்துடன் ஆங்கிலப் பாடசாலை விடுகைப் பரீட்சையில் அல்லது சிங்களப் பாடத்துடன் கல்வித் திணைக்கள கனிஷ்ட பாடசாலைப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், அல்லது அதற்குச் சமமான பரீட்சை அல்லது அதனிலும் கூடிய பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் பத்திரங்களுடன் கீழே கோரப்படும் பத்திரங்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(ஆ) ஆகக் கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(இ) இரண்டு சமீபகால நற்சான்றிதழ்கள் (இதிலொன்று கிராம சேவகரிடம் கிடைத்ததாக வேண்டும்).

(ஈ) நிரந்தர பிரஜையை நிரூபிக்க கிராம சேவகரின் நற்சான்று.

5. அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களினதும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினதும் விண்ணப்பங்கள் இப்பதவிக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

டீ. எச். ஜே. அபேகுணசேகர,
அம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
அம்பாந்தோட்டை,
1973, ஜூலை மாதம் 02 ந் திகதி.

#### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

தலாவ பகுதிக்கு சடுதி மரண விசாரணையாளர் பதவி

1. (அ) விண்ணப்பதாரி முழுப்பெயர் :————.
(தெளிவான எழுத்துக்களில்)

(ஆ) குடும்பப் பெயர் :————.

(இ) மற்றப் பெயர் :————.

(ஈ) விலாசம் :————.

2. நிரந்தர வசிப்பிடமும் வதியும் கால எல்லையும் :————.

3. (அ) 1973.08.14 திகதியின் போது வயது :—
————வருடம்————மாதம்————திகதி.

(ஆ) பிறந்த திகதியும் இடமும் :————.

4. விவாகமானவரா, அல்லது விவாகமாகாதவரா :————.

5. கல்வித் தகைமைகள் :————.

6. தற்போதைய தொழில் :————.

7. யாருக்காவது கடன் கொடுக்குமதியாயின் அதன் விபரம் :————.

8. விண்ணப்பதாரிக்கு உரிமையான ஆதனங்களின் பெறுமானமும் பரப்பும் :————.

9. விண்ணப்பதாரி நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டோ தண்டிக்கப்பட்டோ இருப்பின் அதன் விபரம் :————.

10. இப்பதவிக்குத் தேவையான வேறு விஷேச தகைமைகள் இருப்பின் அவற்றைக் குறிப்பிடுக :————.

இவ்விண்ணப்பப் பத்திரத்தில் என்னுற் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது சரியற்றவையெனத் தெரிவுசெய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப் படுவேன் என்றும் நியமனம் பெற்றபின் சரியற்றவையென்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப் படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேற் குறிப்பிட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவையென்றும் உண்மையானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

7-391—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**1973 ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நடைபெற்ற நொத்தாரிசு கடைசிப் பரீட்சை**

இதன் கீழே காணப்படும் பெயருடைய அபேட்சகர், அவரின் பெயருக்கு முன்னே கொடுக்கப்பட்டிருக்கும் மொழியில் தொழில் நடத்த நொத்தாரிசு கடைசிப்பரீட்சையில் சித்தியடைந்திருக்கிறார் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1. | ஆர். ஜீ. பியதாச | சிங்களம் |
| 2. | டபிள்யூ. ஏ. அமரசூரிய | ” |
| 3. | டி. ஏ. சிறிசேன | ” |
| 4. | செல்வி எஸ். பி. ஜயசிங்க | ” |
| 5. | டி. ஈ. என். அபேசிங்க | ” |
| 6. | எஸ். டபிள்யு. டபிள்யு. அப்புகாமி | ” |
| 7. | செல்வி என். பி. கே. சந்திரசீலி | ” |
| 8. | எஸ். எம். சீ. பி. செனெவிரத்ன | ” |
| 9. | எஸ். ஏ. பி. சமரசுந்தர | ” |
| 10. | எச். எம். டபிள்யூ. பண்டார | ” |
| 11. | ஜி. எஸ். தர்மதிலக | ” |
| 12. | டபிள்யூ. எல். பி. செனெவிரத்ன | ” |
| 13. | ஜே. ஜீ. பதிரன | ” |
| 14. | ஆர். எம். ஆர். ஏ. பீ. கருணாதிலக | ” |
| 15. | கே. எச். எஸ். விக்கிரமரத்ன | ” |
| 16. | பி. விக்கிரமகே | ” |
| 17. | எப். ஜீ. டபிள்யூ. கொடகும்புர | ” |
| 18. | ஜீ பிரேமரத்ன | ” |
| 19. | எச். எஸ். கருணாரத்ன | ” |
| 20. | எஸ். வியனகமகே | ” |
| 21. | எம். எஸ். எம். முஹூசின் | ” |
| 22. | ஆர். சூரியஆராச்சி | ” |
| 23. | பி. பியன்வில | ” |
| 24. | பி. ஜீ. சீ. டயஸ் | ” |
| 25. | கே. பி. கருணாதிலக | ” |
| 26. | எம். கே. எஸ். பி. குமாரரத்ன | ” |
| 27. | பி. எல். ஜீ. குணவந்த | ” |
| 28. | டி. டி. எஸ். சிறிபால | ” |
| 29. | ரி. ஜயசூரிய | ” |
| 30. | கே. எச். எல். எல். பெர்னாந்து | ” |
| 31. | எம். டி. பியசேன | ” |
| 32. | செல்வி யு. இரத்தினவதி | ” |

ஹமீட் பாருக்,
பதிவாளர் தலைமை அதிபதி.

7–170—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

இல. 1/23/35/7(ஜீ)

**நாட்சம்பள அமயத் தட்டெழுத்தாளர்க்கும் சுருக்கெழுத்தாளர்க்கும் நிரந்தர நிலை அளிப்பதற்கான தகுதிப் பரீட்சை—ஒற்ரோபர் 1973**

**பரீட்சைத் தேதி**

1966 மார்ச்சு மாதம் 23 ஆந் தேதியின் 685 ஆம் இல. திறைசேரிச் சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியிலும் 1969 யூலை மாதம் 7 ஆந் தேதியின் இல. (ஜி) 221 கொண்ட திறைசேரிச் சுற்றறிவிப்பு நிருபத்திலும் 1969 யூலை மாதம் 22 ஆந் தேதியின் இல. (ஜி) 223 கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கையிலும் குறிப்பிட்டுள்ள நாட்சம்பள அமய தட்டெழுத்தாளர்க்கும் அமய சுருக்கெழுத்தாளர்க்கும் நிரந்தர நிலைக்கான தகுதிப் பரீட்சை 1973 ஒற்ரோபர் மாதம் 10 ஆந் தேதியன்று கொழும்பில் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும்.

2. **தகவுத்திறன்.**—இதுவரை அரசாங்க திணைக்களங்களில் அமய அடிப்படையில் குறித்த நாட்சம்பள வீதத்தில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள தட்டெழுத்தாளர்களும் சுருக்கெழுத்தாளர்களும் இப்பரீட்சைக்குத் தகுதியுடையவராவர்; ஆனால், அவர்கள் பின்வரும் நிபந்தனைகளைத் திருத்திப்படுத்தல் வேண்டும் :—

(1) பின்வரும் கல்வித் தகைமைகளையுடையவராயிருத்தல் வேண்டும்—

(அ) 1968.5.29 ஆந் தேதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட அமய தட்டெழுத்தாளரும் சுருக்கெழுத்தாளரும். (ஆங்கிலம், சிங்களம் அல்லது தமிழ் மொழிமூலம்)

(i) சி. பா. த. ப. அல்லது

(ii) (1) சிங்களம்/தமிழ் மொழி, (2) எண்கணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம், (3) பிற நான்கு பாடங்கள் ஆகியவற்றில் க. பொ. த. ப. (சாதாரணதரம்) பரீட்சை; ஆனால் இவ்வாறு பாடங்களுள் குறைந்தது ஐந்து பாடத்திலேனும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) 1968.5.29 ஆந் தேதியன்றுக்குப் பின்னர் ஆட்சேர்க்கப்பட்ட அமய தட்டெழுத்தாளரும் சுருக்கெழுத்தாளரும் :

(1) அமய தட்டெழுத்தாளர்—சிங்களம்/தமிழ்

(i) (1) மொழியில் திறமைச் சித்தி உட்பட்ட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய சி. பா. த. ப. அல்லது ;

(ii) (1) சிங்களம்/தமிழ் மொழி, (2) எண்கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது ஆரம்ப கணிதம், அல்லது வர்த்தக எண்கணிதம் என்பவற்றுடன் பிற நான்கு பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரண தரம்) பரீட்சை; ஆனால் இப்பாடங்களுள் ஐந்தில் ஒரே தடவையில் சித்தியடைந்து, அவற்றுள் சிங்களம்/தமிழ் மொழி, உட்பட குறைந்தது நான்கு பாடத்திலேனும் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்;

(2) அமய சுருக்கெழுத்தாளர்கள்—சிங்களம்/தமிழ்

(1) சிங்களம்/தமிழ் மொழியில் திறமைச் சித்தியுட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய சி. பா. த. ப ; அல்லது

சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம் அல்லது தூயகணிதம் அல்லது ஆரம்ப கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம், என்பவற்றுடன் நான்கு பாடங்களில் க. பொ. த. ப. (சாதாரண தரம்) பரீட்சை; ஆனால் இப்பாடங்களுள் ஐந்தில் ஒரே தடவையில் சித்தியடைந்து, அவற்றுள் சிங்களம்/தமிழ் மொழி, உட்பட குறைந்தது நான்கு பாடங்களிலேனும் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—(i) 1956.11.21 ஆந் தேதியின் 331 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5(v), (vi) ஆம் பந்திகளின் பிரகாரம் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர தகைமையுடன் ஆட்சேர்க்கப்பட்டுள்ள அமய சுருக்கெழுத்தாளர்களும், 1968.5.29 ஆந் தேதியின் 741 ஆம் இல. திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடசாலையின் அல்லது கல்வித் திணைக்களத்தின் கனிட்ட பாடசாலை தராதரப் பத்திரத்துடன் ஆட்சேர்க்கப்பட்ட அமய ஆங்கில தட்டெழுத்தாளர்களும் சுருக்கெழுத்தாளர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகவுடையவராவர்.

(ii) கல்வித் தகைமைகள் பற்றிய ஐயமேற்படும் போது, அது பற்றி அரசாங்க நிருவாகத் திணைக்களத்தின் தீர்மானம் பெறப்படல்வேண்டும் ;

(2) அவர்கள் முறையான அதிகாரத்துடன் 1973.10.3 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ ஆட்சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அவர்களின் வேலையும் நடத்தையும் முற்றிலும் திருப்திகரமாகவிருந்துள்ளது.

(4) அவர்கள் இப்பொழுதும் சேவையிலுள்ளனர்.

**குறிப்பு.**—தகுதிகாண் பரீட்சையில் சித்தியெய்தி, அரசாங்க நிருவாகத் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. 53 க்கமைவான பரீட்சார்த்திகள் மட்டுமே மேற்படி முறைப்படியான இணைந்த சேவையினுட் சேர்க்கப்படுதற்குத் தகவுடையவராவர்.

3. **விண்ணப்பங்கள்.**—(i) மாதிரி விண்ணப்பப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் ஒரு முழுத்தாளின் அரைத் தாளில் தங்கள் விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். இதன் பொருட்டு ஒரு தாள் மட்டும் உபயோகிக்கப்படல் வேண்டும். படிவத்தைத் தட்டெழுத்தில் தயாரிக்கலாம்; ஆனால் பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தில் அது நிரப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளருக்குப் பதிவுத் தபாலில், 1973, செப்தெம்பர் 10 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அவர் பெறத்தக்கதாய், உத்தியோகத்தர் சேவை செய்யும் திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பும்போது உத்தியோகத்தரின் வேலையும் நடத்தையும் பற்றித் திணைக்களத் தலைவர்கள் குறிப்பிட்டு, அவர் பரீட்சையெடுப்பதற்குத் தகுதியுடையவரென அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

பரீட்சை ஆணையாளரினால் ஏற்கப்படும் விண்ணப்பங்களுக்குரிய உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோன்றுவதற்குக் கடமையிலீடுபட்டுள்ளவாறான விடுதலை கொடுக்கப்படல் வேண்டும். பிரயாணச் செலவு கொடுக்கப்படமாட்டாது.

(ii) இப்பரீட்சைக்கு முதல் தடைவையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் பின்னுள்ள அமர்வுகள் விஷயத்தில், அவர்களது விண்ணப்பங்கள், பரீட்சார்த்தியின் முறையான கையொப்பத்தில் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டுத் திகதியிடப்பட்ட 25 ரூபா பெறுமதியான முத்திரைகளைக்கொண்டதாகவிருக்க வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் கட்டணம் மீளளிப்பு செய்யப்படமாட்டாது. இப்பரீட்சைக்குக் கட்டப்பட்ட கட்டணங்கள் வேறேதும் பரீட்சைக்கு மாற்றப்பட முடியாது.

4. **ஆளடையாள அட்டைகள்.**—பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருத்திக்கமைய தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் அதிபர் நாயகத்தினால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை;

(ஆ) பரீட்சை தொடங்கும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு;

(இ) பரீட்சை தொடங்குவதற்கு முன்னர் மூன்று ஆண்டுகளுக்கு முற்படாமல் அரசாங்க அதிகாரத்துடன் வழங்கப்பட்ட பரீட்சார்த்தியின் புகைப்படம் தாங்கிய சாதனம் அல்லது உத்திரவுச் சீட்டு அல்லது சான்றிதழ்.

(ஈ) கடவுச்சீட்டின் அளவுள்ள புகைப்படமொன்றும் (புகைப்படத்தின் மறுபுறத்தில் திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்முன் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு இக்கையொப்பமும் புகைப்படமும் சரியானதென அவ்வுத்தியோகத்தர் சான்றளித்தல் வேண்டும். சான்றளிப்பவரின் பெயர், பதவி, திகதி, முகவரி ஆகியன தெளிவாகத் தெரிவித்தல் வேண்டும். மேற்பார்வையாளர் இப்புகைப்படத்தை வைத்திருப்பார்)

5. பரீட்சைத் திட்டம் பின்வருமாறு :—

(1) அமயத் தட்டெழுத்தாளர்

சிங்களம்/தமிழ் மொழிமூலம் :

நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 20 சொற்கள் வீதம் 20 நிமிடங்களுக்குத் தட்டெழுத்தில் ஒரு பகுதியை அடித்தல்.

ஆங்கில மொழிமூலம் :

நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 30 சொற்கள் வீதம் 20 நிமிடங்களுக்கு ஒரு பகுதியை தட்டெழுத்தில் அடித்தல்.

(2) அமய சுருக்கெழுத்தாளர்

சிங்களம்/தமிழ் மொழிமூலம் :

(i) நிமிடத்துக்கு 50 சொற்கள் வீதம் சொல்லப்படும் ஒரு பகுதியை 5 நிமிடங்கள் சுருக்கெழுத்தில் எடுத்து, அப்பகுதியை நிமிடத்துக்கு 5 சொற்கள் வீதம் சொந்த எழுத்தில் பார்த்தெழுதுதல்;

(ii)) நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 15 சொற்கள் வீதம் ஒரு பகுதியை 20 நிமிடங்களுக்குத் தட்டெழுத்தில் அடித்தல்.

ஆங்கில மொழிமூலம்

(i) நிமிடத்துக்கு 80 சொற்கள் வீதம் சொல்லப்படும் ஒரு பகுதியை 5 நிமிடங்கள் சுருக்கெழுத்தில் எடுத்து, அப்பகுதியை நிமிடத்துக்கு 7 சொற்கள் வீதம் சொந்த எழுத்தில் பார்த்தெழுதுதல்;

(ii) நிமிடத்துக்கு ஆகக்குறைந்தது 30 சொற்கள் வீதம் ஒரு பகுதியை 20 நிமிடங்களுக்குத் தட்டெழுத்தில் அடித்தல்.

6. தகுதிப் பரீட்சையில் சித்தியடைவதற்கு எடுக்க வேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் பின்வருவனவாகும் :—

தட்டெழுத்து—40 சதவீதம்

சுருக்கெழுத்து—50 சதவீதம்.

7. பரீட்சை நடாத்தல் பற்றிப் பரீட்சை ஆணையாளர் விதித்துள்ள விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவராவர்; அன்றியும் அத்தகைய விதிகள் பிரமாணங்கள் எதனையும் மீறியதற்கு அவரால் விதிக்கப்படும் தண்டனைக்கும் ஆளாவர். இவ்வறிவித்தலின் முடிவில் இவ்விதிகள் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன.

8. பரீட்சார்த்திகள் தங்கள் சொந்தத் தட்டெழுத்துப் பொறிகளைப் பரீட்சைக்குக் கொண்டுவருமாறு வேண்டப்படுகின்றனர். திணைக்களத் தலைவர்கள் தற்றுணிபின்படி, இப்பரீட்சைக்குத் தோன்றும் தமது திணைக்கள ஊழியர்கள் பரீட்சை மண்டபத்திற்குத் தமது அலுவலகத் தட்டெழுத்துப் பொறிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கலாம்; ஆனால் அத்தட்டெழுத்துப் பொறிகள் உடனடியாகவும் பாதுகாப்பாகவும் திருப்பிக் கொண்டுவரப்படுமென அவர்கள் திருத்திப்படல் வேண்டும். எனினும் இச்சலுகையை அனுமதிக்க முன்னர், இச்சலுகையைப் பயன்படுத்த உத்தேசிக்கும் உத்தியோகத்தரிடமிருந்து அவர்கள் பாதுகாப்பாகவும் உடனடியாகவும் தட்டெழுத்துப் பொறிகளைத் திருப்பிக் கொடுப்பாரெனவும் தட்டெழுத்துப் பொறிகள் அவர் வசமிருக்கும்போது அதற்கு ஏற்படும் இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு அவர்களே பொறுப்பாளியாவரெனவும் எழுத்துமூல உத்தரவாதம் பெறல்வேண்டும்.

மு. க.—பரீட்சை ஆணையாளர் பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகளுக்குத் தட்டெழுத்துப் பொறிகளைக் கொடுக்கமாட்டார்.

9. இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் பெயர்கள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும். இவ்வாறு நிரந்தர நிலைக்குத் தெரிந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் அவர்கள் அனுப்பப்படும் எந்தத் திணைக்களத்திலோ நிலையத்திலோ சேவை செய்யுமாறு வேண்டப்படுவர்.

10. விண்ணப்பங்கள் ஏற்கப்படும் பரீட்சார்த்திகள் யாவர்க்கும் பரீட்சை ஆணையாளர் அனுமதிப் படிவங்களை நேர அட்டவணைப் பிரதியொன்றுடன் வழங்குவர். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள் பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமித்துள்ள உத்தியோகத்தரிடம் தங்கள் அனுமதிப் படிவத்தைக் காட்டல் வேண்டும். அத்தகைய படிவத்தைக் காட்டத் தவறும் பரீட்சார்த்தியொருவர் பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்.

11. இப்பிரமாணங்களில் ஏற்பாடு செய்யப்படாத எவ்விடயத்தையும் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி தமது தற்றுணிபின்படி கையாளுவர்.

பி. எச். சிறிவர்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உண்ணாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரும்
பதில் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியும்.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு யூன் 30 ந் தேதி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**நாட்சம்பள அமயத் தட்டெழுத்தாளர்க்கும் சுருக்கெழுத்தாளர்க்கும் நிரந்தர நிலை அளிப்பதற்கான தகுதிப் பரீட்சை— ஒற்ரோபர் 1973**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்தில்) :————.
2. பால் :————.
3. பதவிப் பெயர் :————.
4. திணைக்களம் :————.
5. அரசகரும விலாசம் :————.
6. அமய சுருக்கெழுத்தாளராக/தட்டெழுத்தாளராக நியமித்த தேதி :————.
7. மிகவுயர்ந்த கல்வித் தகைமை :————.

குறிப்பு.—பாடங்களுக்கெதிராகத் திறமைச்சித்தி குறிப்பிடப்படல் வேண்டும். (க. பொ. த. பத்திரமாயின் (சா. த.) பரீட்சை எடுத்த ஆண்டு, தேதி, சுட்டு இல. திறமைச்சித்தி எதுவுமுண்டாயின் அதனைக் குறிப்பிட்டு ஒவ்வொரு முறையும் சித்தியடைந்த பாடங்கள் ஆகியவற்றைக் கூறுக).

8. அமய சுருக்கெழுத்தாளராக/தட்டெழுத்தாளராக எம்மொழியில் சேர்க்கப்பட்டீர் ?
(அதாவது சிங்களம்/தமிழ் அல்லது ஆங்கிலம்) :————.

9. முத்திரைக்கான கூடு

ரூபா 25/-

குறிப்பு.—ரூபா 25/- பெறுமதியான முத்திரைகளைப் பரீட்சார்த்தி ஒட்டி அவற்றில் தனது கையொப்பத்தையும் திகதியையுமிட்டு அவற்றை பெறுமதி நீக்கம் செய்தல் வேண்டும். முத்திரைகள் ஒன்றின் மேலொன்ருக ஒட்டப்படலாகாது.

நான் கூறிய கூற்றுக்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையுமென எனது நேர்மையின் பேரில் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதில் என்னல் ஒட்டப்பட்ட முத்திரைகள் உண்மையானவையும் முன்னர் உபயோகிக்கப்படாதவையும் ஆகும். இப்பரீட்சைக்குரிய ஒழுங்கு விதிகளுக்கு இணங்கியொழுக நான் உடன்படுகிறேன்.

.................................
பரீட்சார்த்தியின் கையோப்பம்
(திணைக்களத் தலைவரின் முன்னிலையில் கையொப்பம் வைக்கப்படல் வேண்டும்)

தேதி :————.

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

1. இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்தில் சேவை செய்யும் நாட்சம்பள அமயச் சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர் ;

2. மேலே கொடுத்துள்ள விவரங்கள் செவ்வைபார்க்கப்பட்டுச் சரியானமையெனக் காணப்பட்டது ;

3. அவரின் வேலையும் நடத்தையும் முற்றிலும் திருத்திகரமானது ;

4. இவ்வுத்தியோகத்தர் இப் பரீட்சைக்கு முதல் தடவையாகத் தோற்றுகிருரென்றும்*/இவ் விண்ணப்பம் 25 ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கொண்டுள்ளதென்றும்,

5. இப்பரீட்சையைக் கட்டுப்படுத்தும் பிரமாணங்களின் பிரகாரம் அவர் இப்பரீட்சைக்குத் தகுதியுடையவர் என நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

*பொருத்தமற்றதை நீக்கிவிடுக.

கையொப்பம்,
கையொப்பமிடும் உத்தியோகத்தரின் பதவி பெயர்.
(திணைக்களத் தலைவர் பதவிப் பெயர்)

திகதி :—

**பரீட்சைத் திணைக்களம், இலங்கை**

பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி, பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர், ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்ருதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்ருதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்து விடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும் அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச்சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைப் பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாக கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுத்தாளையோ, வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக் குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடை யெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி நம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத் மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்க கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியனவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத் தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

*பரீட்சார்த்திகளுக்கு—*

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்து கொள்ளவேண்டும் ;

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ளவேண்டும், அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும் ;

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக் கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல்வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கெழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப் பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக்கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழி றப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும் ;

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்கு மிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம் ;

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக ;

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத் தாளின் மறு பக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படல் வேண்டும் ;

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும் ;

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவு வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும் ;

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது ;

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டுமானால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிறேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு-2.

7–361—13.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **யூலை** | 6.7.73 | வெள்ளி | 27.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 4.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 11.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 18.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஒகத்து** | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| **செத்தெம்பர்** | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ௵ ஒகத்து ௴ 18 ந் ௳.


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.